www.freetnbooks.com

3/6 40

# இரண்டாம் பருவ நிறைவுத் தேர்வு - 2025

தேர்வு எண் |  |  |  |  |  |

காலம் : 2.00 மணி — **ஆறாம் வகுப்பு - அறிவியல்** — மதிப்பெண் : 60

**I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக. (5x1=5)**

1. வேதி ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் சாதனம்
   அ) மின்விசிறி ஆ) சூரியமின்கலன் இ) மின்கலன் ஈ) தொலைக்காட்சி
2. காற்றில் நைட்ரஜனின் சதவீதம்
   அ) 78% ஆ) 21% இ) 0.03% ஈ) 1%
3. செல்லின் அளவைக் குறிக்கும் குறியீடு
   அ) சென்டிமீட்டர் ஆ) மில்லிமீட்டர் இ) மைக்ரோமீட்டர் ஈ) மீட்டர்
4. மனிதனின் முதன்மையான சுவாச உறுப்பு
   அ) இரைப்பை ஆ) மண்ணீரல் இ) இதயம் ஈ) நுரையீரல்கள்
5. உள்ளீட்டுக் கருவி அல்லாதது எது?
   அ) சுட்டி ஆ) விசைப்பலகை இ) ஒலிபெருக்கி ஈ) விரலி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக. (5x1=5)**

6. வெப்பநிலையின் SI அலகு ________.
7. ________ பொருள்கள் தன் வழியே மின்னோட்டம் செல்ல அனுமதிக்கின்றன.
8. ஒளிச்சேர்க்கையின் பொழுது வெளிவரும் வாயு ________ ஆகும்.
9. செல்களை காண உதவும் உபகரணம் ________.
10. மனித உடலிலுள்ள மிகப்பெரிய உணர் உறுப்பு ________ ஆகும்.

**III. சரியா தவறா எனக் கூறுக. (5x1=5)**

11. நீரிலிருந்து வெப்பம் வெளியேறும் பொழுது நீராவி உருவாகும்.
12. பக்க இணைப்பு மின்சுற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மின்னோட்டப் பாதைகள் உண்டு.
13. தீக்குச்சி எரிவது ஒரு மீள்மாற்றம்.
14. புவிவெப்பமயமாதலை மரங்களை நடுவதன் மூலம் குறைக்கலாம்.
15. உயிரினங்களின் மிகச்சிறிய அலகு செல்.

**IV. பொருத்துக. (5x1=5)**

| | | |
|---|---|---|
| 16. காது | - | இதயத்தசை |
| 17. எலும்பு மண்டலம் | - | தட்டையான தசை |
| 18. உதரவிதானம் | - | ஒலி |
| 19. இதயம் | - | நுண்காற்றுப்பைகள் |
| 20. நுரையீரல்கள் | - | உள்ளுறுப்புகளைப் பாதுகாக்கின்றது |

**V. ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். (10x2=20)**

21. வெப்பநிலை என்றால் என்ன?
22. வீட்டில் எந்தெந்த மின்சார சாதனங்களிலிருந்து நாம் வெப்பத்தைப் பெறுகிறோம் எனப்பட்டியலிடுக.
23. ஒப்புமை தருக. 1) வெப்பம் : ஜூல் :: வெப்பநிலை : ________. 2) பனிக்கட்டி : 0°C :: கொதிநீர் : ________.
24. ஒப்புமை தருக.
    1) உணவு சமைத்தல் : விரும்பத்தக்க மாற்றம் :: உணவு கெட்டுப்போதல் : ________.
    2) தீக்குச்சி எரிதல் : ________ மாற்றம் :: பூமிசுற்றுதல் : மெதுவான மாற்றம்.
25. தாவரங்கள் மட்குதல் என்ன வகையான மாற்றம்?
26. கரைசல் என்றால் என்ன?
27. வளிமண்டலம் என்றால் என்ன?
28. நீங்கள் வாய்வழியாக சுவாசித்தால் என்ன நிகழும்?
29. 1665ம் ஆண்டு செல்லைக் கண்டறிந்தவர் யார்?
30. செல்லின் முக்கிய உட்கூறுகள் யாவை?
31. எலும்பு மண்டலம் என்றால் என்ன?
32. முக்கியமான ஐந்து உணர் உறுப்புகளின் பெயர்களை எழுதுக.
33. கணினியின் கூறுகள் யாவை?

**VI. ஏதேனும் 4 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். (4x5=20)**

34. வெப்ப விரிவடைதலைத் தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.
35. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1) வெப்பம் | - | 0°C |
| 2) வெப்பநிலை | - | 100°C |
| 3) வெப்பச்சமநிலை | - | கெல்வின் |
| 4) பனிக்கட்டி | - | வெப்பப் பரிமாற்றம் இல்லை |
| 5) கொதிநீர் | | ஜூல் |

36. மின்மூலங்கள் என்றால் என்ன? இந்தியாவில் உள்ள பல்வேறு மின்நிலையங்கள் பற்றி விளக்குக.
37. உன்னைச் சுற்றி நடக்கும் மாற்றங்களிலிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாற்றத்திற்கும் தகுந்த எடுத்துக்காட்டு தருக.
    1) மெதுவான / வேகமான மாற்றம் 2) மீள்/மீளாமாற்றம் 3) இயற்பியல் / வேதியியல் மாற்றம்
    ... / செயற்கையான அல்லது மனிதனால் நிகழ்த்தப்பட்ட மாற்றம்
    ... மாற்றம் ... படுகிறது?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner